புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 - வெளியிடப்பட்டது ஜுன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# மாசித் திருவிழாவில் பொன்னர் சங்கர் படுகள நிகழ்வு

க. சிவகுமார்,
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, காங்கேயம், திருப்பூர் மாவட்டம்-638108 , தமிழ்நாடு, (கோயம்புத்தூர், பாரதியார் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

முனைவர் வெ. பன்னீர்செல்வம்,
தமிழ் உதவிப் பேராசிரியர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, காங்கேயம், திருப்பூர் மாவட்டம்-638108 , தமிழ்நாடு (கோயம்புத்தூர், பாரதியார் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

ஆய்வுச் சுருக்கம்

படுகளம் என்பது மகாபாரதக் கூத்துடன் தொடர்புடைய சொல். மகாபாரதக் கதையின் தாக்கத்தை பெருமளவு கொண்ட பொன்னர் சங்கர் கதையிலும் படுகளம் இடம் பெறுகிறது. பொன்னர் சங்கர் கதையில், தலையூர் காளிமன்னன் உடனான இறுதிப் போருக்கு பின், முதலில் தம்பி சங்கரும் பின்னர், பொன்னரும் தற்கொலை செய்து கொண்டு இறந்து கிடப்பதை படுகளம் என்பர். பொன்னர் சங்கர் கதை மேற்குத் தமிழகத்தில் (கொங்கு நாடு) உடுக்கையடிக் கதைப்பாடல் வடிவிலும், திருச்சி, கரூர் மாவட்ட பகுதிகளில் நாடக வடிவிலும் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. அவர்கள் வாழ்வியலோடு தொடர்புடைய இடங்கள் கதைப் பாடல்களில் விரிவாக குறிப்பிடப்படுகின்றன. அவற்றுள் பல இடங்களில் தற்பொழுது, கோயில்கள் அமைக்கப்பட்டு வழிபாடு நடக்கின்றன. அத்தகைய கோயில்களுள் ஒன்று திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டம், பூசாரிபட்டி அருள்மிகு கன்னிமார், குளக்கரை கருப்புசாமி கோயில். இந்த இடத்தில் தான் பொன்னர் சங்கர் தற்கொலை செய்து கொண்டதாக கூறப்படுகிறது. அக்கோயில் வளாகத்தில் ஆண்டுக்கொரு முறை மட்டும், மாசித் திருவிழாவின் போது நடைபெறும் படுகள நிகழ்வு இங்கு ஆய்வுக்கு உட்படுத்தப்படுகிறது. அந்நிகழ்வை கள ஆய்வு செய்ததன் மூலம், படுகள நிகழ்வு, அக்கோயிலின் அமைப்பு, வழிபாட்டு முறைகள் உள்ளிட்ட பல தகவல்களை அறிந்து கொள்ள முடிகின்றன.

## முன்னுரை

நாட்டுப்புறக் கதைப்பாடல்கள், செய்திகளை மக்களுக்கு கொண்டு சேர்க்கும் மிகப்பெரிய பணியினை கடந்த காலங்களில் செய்துள்ளன. இன்றைய தகவல் தொழில்நுட்ப யுகத்தில் சமூக ஊடகங்கள் செய்யும் பணியினை கடந்த காலங்களில் கதைப்பாடல்கள் செய்தன என்றால் மிகையல்ல. கதைப்பாடல்கள் சில வரலாறுகளைக் கட்டமைக்கவும் துணை புரிந்துள்ளன. அதனால் தான் நாட்டுப்புறக் கதைப்பாடல் வகைகளுள் வரலாற்றுக் கதைப்பாடல் என்ற வகையையும் அறிஞர்கள் வகுத்துள்ளனர். அதேசமயம், கற்பனையும் கலந்தவை. இதில் உண்மைத் தன்மையின் விழுக்காட்டினை அறிவது கடினமானது. பல கதைப்பாடல்களின் தலைவன் அல்லது தலைவி வழிபடு தெய்வங்களாக உள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. அவற்றுள், சிற்றரசர்களாக இருந்து, இன்று தெய்வங்களாக வணங்கப்படுகின்ற பொன்னர் சங்கர் வரலாற்றைக் கதைப்பாடல் துணை கொண்டே அறிய முடிகிறது. அவ்வகையில், கதைப்பாடல் குறிப்பிடும் பொன்னர் சங்கர் பிறப்பிடம், போர் செய்த இடம், இறந்து போன இடம் (படுகளம்) ஆகியவற்றில் கோயில்கள் அமைக்கப்பட்டு வழிபாடு நடத்தப்படுகிறது. அவற்றுள், அவர்கள் இறந்த இடமாக கருதப்படும் படுகளக் கோயிலில் ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே நடைபெறும் படுகள நிகழ்வும், அக்கோயிலின் அமைப்பு மற்றும் வழிபாட்டு முறைகளும் இக்கட்டுரையில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

*படுகளக் கோயில் அமைவிடம்*

*திருச்சி மாவட்டம், மணப்பாறை நகரத்திலிருந்து வடமேற்கு திசையில் 12 கிலோமீட்டர் தொலைவில் படுகளக் கோயில் அமைந்துள்ளது. சமதளத்தை விட சற்று மேடான பகுதியில் இக்கோவில் உள்ளது. கோயிலைச் சுற்றிலும் பொட்டல் வெளியாக உள்ள இடத்தை 'படுகளக் காடு' என்றே பக்தர்கள் அழைக்கின்றனர். சுமார் ஒரு ஏக்கர் பரப்பளவு உள்ள கோயில் வளாகத்தை சுற்றிலும் சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டுள்ளது. அதற்குள் மையமாக வடக்கு நோக்கி பிரதான கோயில் அமைக்கப்பட்டுள்ளது. கருவறை, அர்த்தமண்டபம், திறந்த நிலை முன்பு மண்டபம் என்ற அமைப்பில் உள்ளது. இக்கோயில் கருவறையில், கன்னிமார், பொன்னர் சங்கர், அருக்காணி தங்கம், உள்ளிட்ட தெய்வங்களின் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. பிரதான கோயிலின் மேற்கு மற்றும் வடமேற்கு பகுதியில் விநாயகர், முருகன், கருப்பசாமி, பெரிய காண்டியம்மன் ஆகிய தெய்வங்களின் கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. கிழக்குப் பகுதியில், நின்ற நிலையில் சுமார் 20 அடி உயரமுள்ள மகாமுனி சிலை அமைக்கப்பட்டு பூசைகள் நடைபெற்று வருகின்றன.*

*ஏற்கனவே சிறிய அளவில் இருந்த கோயிலை அகற்றிவிட்டு, ஆகம விதிப்படி கோயில் கட்டி, மூன்று நிலை விமானம் அமைக்கப்பட்டு கடந்த 2017 ஆம் ஆண்டு குடமுழுக்கு விழா நடைபெற்றுள்ளதை கள ஆய்வின் போது (கள ஆய்வு நாள்:25.02.2023) அறிய முடிந்தது. இக்கோயில், அருள்மிகு கன்னிமார் மற்றும் குளக்கரை கருப்புசாமி திருக்கோயில் என்றே அழைப்பிதழ்களில் குறிப்பிடப்படுகின்றன. 'பொன்னர் சங்கர் இருவரும் தலையூர் காளிமன்னன் உடனான இறுதிப் போர் முடிந்த பின்பு, இக்கோயில் அமைந்துள்ள இடத்தில் தான் இறந்தனர்' என்று தகவலாளர் மு.வீரசங்கர் (நேர்காணல், நாள்: 25.02.2023) தெரிவித்தார்.*

*படுகளக் கோயிலின் வடமேற்கு சுற்றுச்சுவரை ஒட்டிய பகுதியில் பொன்னர் சங்கர் மாண்ட விதத்தை நினைவு கூறும் வகையில் சுதை சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அருகில், அவர்களது வாகனமான குதிரை சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. கோயிலின் வடக்கு மதிற்சுவரை ஒட்டி வீரமலைச் சாம்புகன் மற்றும் அவரின் வாகனமாகிய காளை மாட்டு சுதைச் சிற்பங்கள் உள்ளன. மாயவரின் உருவமும் சுதையால் அமைக்கப்பட்டுள்ளது. கோயில் வளாகத்திற்குள் வன்னி மரம் ஒன்றும் உள்ளது.*

*இந்த வன்னி மரத்தில் மறைந்திருந்து தான் மாயவர் சங்கர் மீது அம்பு ஏய்த்ததாக (பழனிசாமி-சாந்தி பழனிசாமி, அருள்மிகு பொன்னர் சங்கர் அண்ணன்மார் வரலாறு ப.64) கூறுகின்றனர். கோயிலின் சுற்றுச்சுவருக்கு வெளியே, கோயிலுக்கு எதிரில் உள்ள இடத்தில் ஆடு, சேவல் பலியிடப்படுகின்றன. இந்த பலியிடுதல், மகாமுனி மற்றும் கருப்புசாமிக்கு உரியது. கனிமாரம்மன் மற்றும் பொன்னர், சங்கருக்கு பலியிடுவதில்லை என்று கோயில் பரம்பரை அறங்காவலர்களுள் ஒருவரான பொ.முனியப்பன் (நேர்காணல் நாள்: 07.05.2023) தெரிவித்தார்.*

*மாசித் திருவிழா*

*பொன்னர் சங்கர் வாழ்வியலோடு தொடர்புடைய இடங்களாகக் கதைப்பாடல் மூலம் அறியப்படுகின்ற பொன்னி வளநாடு, வீரப்பூர், படுகளம், மாயனூர், வீரமலை, வெள்ளாங்குளம் உள்ளிட்ட இடங்களில் கோயில்கள் அமைந்துள்ளன. இங்கு வழிபாடு செய்வதற்காக கோவை, திருப்பூர், ஈரோடு, கரூர், நாமக்கல், சேலம் ஆகிய மாவட்டங்களில் இருந்து அதிக அளவிலான பக்தர்கள் வருவதைக் காண முடிகிறது. பிற மாவட்ட மக்களும் வழிபட வந்து செல்கின்றனர். ஞாயிற்றுக்கிழமைகள், அமாவாசை, விஜயதசமி மற்றும் சில விசேஷ நாட்களில் பக்தர்கள் வந்தாலும், ஒவ்வொரு ஆண்டும் மாசி மாதம் சிவன் ராத்திரி முடிந்த பின்பு நடைபெறுகின்ற மாசி திருவிழாவில் தான் ஏராளமான பக்தர்கள் வருகின்றனர். பொன்னர், சங்கர் பிறந்த இடமாக கருதப்படும் பொன்னி வளநாட்டு கோயிலில் மாசி மாதம் திருவோண நட்சத்திரத்தில் பூ சொறிதல் என்ற நிகழ்வுடன் பத்து நாள் திருவிழா நடைபெறுகிறது. அங்கு ஏழு மற்றும் எட்டாம் நாளில் தங்காய் கிணற்றில் இருந்து தீர்த்தம் கொண்டு வருதல் மாயவர் பூஜை பொன்னர் சங்கர் கிளி பிடித்தல் ஆகிய முக்கிய நிகழ்வுகள் நடைபெறுகின்றன. பொன்னர் சங்கர் மேனாட்டுப்படையுடன் போர் செய்த இடமாக கருதப்படும் வீரப்பூரில் உள்ள கோயில்கள் அருள்மிகு கன்னிமார அம்மன் வகையறா திருக்கோயில்கள் என்று அழைக்கப்படுகின்றன. இதில் முக்கியமான கோயிலில் பெரிய காண்டியம்மன் மூலவராக வீற்றிருக்கிறார். உற்சவ மூர்த்திகளாக பொன்னர் சங்கர் வீற்றிருக்கின்றனர்.*

*வீரப்பூர் கோயில்*

*படுகளத்தில் இருந்து பிடி மண் எடுத்து வந்து, 1642-1672 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில், வசோப கம்பைய நாயக்கர் என்பவரால் கட்டப்பட்டது என்பதை வீரப்பூர் கோயில் நிர்வாகம் (பொன்னர் சங்கர் அண்ணன்மார் வரலாறு ப.6) வெளியிட்டுள்ள தல வரலாறு மூலம் அறிய முடிகிறது.*

*மகாமுனி, மாசி கருப்பண்ணன், பொன்னர், சங்கர் கோயில்களும் தனியே உள்ளன. இங்கு மாசி மாதம் சதய நட்சத்திர நாளில் கொடியேற்றம் என்ற பெயரில் திருவிழா தொடங்கி, தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறுகின்றன. அதே நாளில் படுகளக் கோயிலிலும் திருவிழா தொடங்குகிறது. முதல் நாள் திருவிழா, இரண்டாம் நாள் திருவிழா என்று பத்து நாட்களும் குறிப்பிடப்படுகின்றன. இதில் வீரப்பூர் பெரியகாண்டி அம்மன் கோயிலின் முக்கிய நிகழ்வான வேடபரி, எட்டாம் நாள் மாலையில் நடைபெறுகிறது. படுகளக் கோயிலின் முக்கிய நிகழ்வான பொன்னர் சங்கர் படுகளம் ஏழாம் நாள் இரவு நடைபெறுகிறது.*

*பொன்னர் சங்கர் படுகள நிகழ்வு*

*பூசாரிபட்டி படுகளக் கோயிலில் பத்து நாட்கள் நடைபெறும் மாசித் திருவிழாவில் ஏழாம் நாள் மிக முக்கியமானது. அன்றைய தினம் பிற்பகல் முதலே பல்வேறு ஊர்களில் இருந்து வரும் பக்தர்கள் (சுற்றுலா பேருந்து, சரக்கு லாரிகள், வேன், கார் என்று பல்வேறு வகை வாகனங்களில் பக்தர்கள் வருகின்றனர்) மர நிழல்களிலும் அருகில் உள்ள விவசாயிகளின் தோட்டங்களிலும் வாகனங்களை நிறுத்திவிட்டு, அங்கேயே சமையல் செய்து சாப்பிடுகின்றனர். திருவிழாவின் ஏழாம் நாள் மாலை முதலே படுகளக் கோயிலைச் சுற்றி ஒருவித பரபரப்பு நிலவுவதை கள ஆய்வின் போது காணமுடிந்தது. கோயில் சுற்றுச்சுவரில் உள்ள நான்கு வாயில்களும் மூடப்பட்டு, மரக்கட்டைகளை கொண்டு தடுப்பு ஏற்படுத்தப்படிருந்தன. கோயில் வளாகம் முழுவதும் காவல்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. கோயில் வளாகத்திற்குள் வந்த பக்தர்கள் பெரும்பாலானால் அங்கேயே மண் தரையில் அமர்ந்து விட்டனர். இரவு 9 மணி அளவில் படுகள நிகழ்வு தொடங்கியது. கோயில் வளாகத்திற்குள் அமர்ந்திருந்த கூட்டத்தில் இருந்த சில ஆண்கள் தன்னிலை மறந்து மயங்கி சரிந்தனர். சிலர் ஆக்ரோஷமாக கத்தியபடி துள்ளி விழுந்து மயங்கினர். இதை 'படுகளம் சாய்தல்' (பழனிசாமி-சாந்தி பழனிசாமி, அருள்மிகு பொன்னர் சங்கர் அண்ணன்மார் வரலாறு ப.64) என்கின்றனர். அப்படி, படுகளம் வீழ்ந்த ஆண்களை மட்டும் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் தலை தெற்கு திசையில் இருக்கும் படி வரிசையாக கிடத்துகின்றனர். அதேபோல், கோயில் வளாகத்திற்கு வெளியே படுகளம் விழுந்தவர்களும் தூக்கிவரப்பட்டு வரிசையாக கிடத்தப்பட்டனர். இந்தப் படுகள நிகழ்வின்போது, பெண்கள் படுகளமாக விழுவதைக் காண முடியவில்லை. இதுகுறித்து கேட்டபோது, பெண்கள் படுகளமாக விழுவது அரிதானது. அப்படியே விழுந்தாலும், அவர்களைக் கோயில் வளாகத்திற்குள் கிடத்துவதில்லை. உடனடியாக தீர்த்தம் போட்டு எழுப்பி விடுவோம் என்று கோயில் பூசாரி மு. பொன்னுசாமி*

*(நேர்காணல் நாள்: 26.2. 2023) தெரிவித்தார். படுகளம் விழுந்தவர்களை வரிசையாக கிடத்தி, அவர்களைப் பாதுகாக்கும் பணிக்கு பரம்பரை முறைதாரர்களாக திருப்பூர் மாவட்டம், காங்கேயம் அருகில் உள்ள புதுப்பாளையம் கிராமத்தினர் உள்ளனர். இப்பணியை அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக அக்கிராமத்தினர் செய்து வருவதாக தகவலாளர் சி.சண்முகம் (நேர்காணல் நாள்: 26.2. 2023) தெரிவித்தார்.*

*முத்துப் பல்லக்கும் தீர்த்தக் குடமும்*

*பூசாரிபட்டி அருள்மிகு கன்னிமாரம்மன், கருப்பசாமி கோயில் வளாகத்தில் நடைபெறும் மாசித் திருவிழா பொன்னர் சங்க படுகள நிகழ்வில் முக்கியமான ஒன்று, பல்லக்கும் அதில் தீர்த்தக் கூட வருகையும் ஆகும். படுகள நாளன்று இரவு 11 மணியளவில், அறங்காவலர்கள், பூசாரிகள் மற்றும் முறைதாரர்கள் கோயிலில் இருந்து புறப்பட்டு, மேற்கு திசையில் சுமார் 500 மீட்டர் தூரத்தில் உள்ள ஒரு கிணற்றுக்கு செல்கின்றனர். இதை 'தீர்த்தக் கிணறு' என்று குறிப்பிடுகின்றனர். அப்பொழுது, சுமார் 20 அடி நீளமும் எட்டடி உயரமும் உள்ள பல்லுக்கும் உடன் கொண்டு செல்லப்படுகிறது. அந்த பல்லுக்கு வண்ணக் காகிதங்கள் மற்றும் மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்படுகிறது. அதை 'முத்துப் பல்லுக்கு' என்றே தகவலாளர் மு.*

*பொன்னுசாமி (நேர்காணல் நாள்: 26.2. 2023) குறிப்பிட்டார். கிணற்றடியில் வெள்ளை மாத்து விரிக்கப்பட்டு அதன் மீது தீர்த்த குடம் வைக்கப்பட்டு அதில் கூவண்ணாம் பள்ளம் சுனை மற்றும் காவிரி ஆற்றில் இருந்து கொண்டுவரப்பட்ட தீர்த்தம் நிரப்பப்பட்டு அலங்கரிக்கப்படுகிறது.*

*கோயிலில் இருந்து கொண்டு செல்லப்பட்ட பெரிய காண்டி அம்மன் மற்றும் அருக்காணி தங்கம் ஐம்பொன் சிலைகளும் அங்கு வைத்து அலங்கரிக்கப்படுகின்றன. அதற்குரிய பூஜைகள் நடத்தப்பட்டு தீர்த்த குடம் மற்றும் அம்மன் சிலைகள் அந்த முத்துப் பல்லக்கில் வைக்கப்பட்டு மேளதாளத்துடன் கோயிலுக்கு எடுத்துவரப்படுகிறது. கோயிலை வலம்புரியாக சுற்றி வரும் பல்லுக்கு, வடக்கு வாசல் முன் நிறுத்தப்படுகிறது. பல்லக்கில் இருக்கும் தீர்த்த குடம் மற்றும் அம்மன் சிலைகள் மட்டும் கோவில் வளாகத்திற்குள் கொண்டு வரப்படுகின்றன. கோயில் வளாகத்தில் வரிசையாகக் கிடத்தப்பட்டுள்ள படுகளங்களுக்கு வலது புறமாக தீர்த்த குடம் மற்றும் அம்மன் சிலைகள் வைக்கப்பட்டு பூசைகள் நடத்தப்படுகின்றன. அப்பொழுது, அந்த பக்தர்கள் கூட்டத்தில் அமர்ந்திருந்த ஒரு சிறு பெண்ணுக்கு அருள் வருகிறது. அந்த பெண் குழந்தையின் மீது அருக்காணி நல்லதங்கம் வந்து இறங்கியுள்ளதாக நம்புகின்றனர். அருள் வந்த குழந்தைக்கு மாலை போட்டு, பொட்டு வைத்து, கிடத்தப்பட்டுள்ள படுகளங்களைச் சுற்றி அழைத்து வந்ததை கள ஆய்வில் (கள ஆய்வு நாள்: 26.02.2023) காணமுடிந்தது.*

*படுகளம் எழுப்புதல்*

*படுகளமாக விழுந்த பக்தர்கள் சில மணி நேரம் அசைவின்றி அப்படியே கிடக்கின்றனர். படுகளங்கள் கை, கால்கள் விறைத்தபடி அசைவின்றி கிடப்பது பார்ப்போருக்கு ஒருவித அச்சு உணர்வை உண்டாக்குகிறது. தெய்வம் ஏறிய அச்சிறு பெண் படுகளங்களைச் சுற்றி வந்து அம்மன் சிலைகள் வைக்கப்பட்டுள்ள இடத்திற்கு வந்தவுடன், தீர்த்தக் குடத்தில் உள்ள தீர்த்தத்தை படுகளங்கள் மீது தெளிக்க, படுகளமானவர்கள் மீண்டு எழுகின்றனர். சில படுகளங்கள் ஆவேசமாகத் துள்ளி எழுவதையும் காண முடிகிறது.*

*தெய்வம் ஏறிய பெண் குழந்தை, பொன்னர் சங்கரின் தங்கை அருக்காணி நல்லதங்கமாக கருதப்படுவாள் என்று தகவலாளர் ம. பாண்டியன் (நேர்காணல், நாள்: 26.2.2023) தெரிவித்தார்.*

*பொன்னர் சங்கர் உயிர்த்தெழுதல்*

*படுகளம் என்பது பொன்னர் சங்கர் இறந்ததையே குறிக்கிறது. கதைப்படி, பொன்னி வளநாட்டு படைகளுக்கும் மேனாட்டு காளிமன்னன் படைகளுக்கும் இடையே வீரப்பூரில் இறுதிப் போர் நடக்கிறது. அத்தை பிள்ளை மைத்துனர்களான செய்யபெருமாள், வையப்பெருமாள், எதிரில்லாபெருமாள் ஆகியோர் தலைமையிலான வளநாட்டு படை, வீர மலைச்சாம்புகன் துணையோடு மேனாட்டு படையை அழித்து வெற்றி கொள்கிறது. வெற்றி முழக்கத்தோடு திரும்பி வரும் வழியில் வீரமலை காட்டில், மாயவர் அதிக வெப்பத்தை உண்டாக்குகிறார். அதனால், வளநாட்டு படைகளுக்கும் அத்தை பிள்ளை மைத்துனர்கள் மூவருக்கும் அதிக தாகம் ஏற்படுகிறது.*

*அப்பொழுது,*

*"அந்த நல்ல வேளையிலே ஆயனுட காரணத்தால்*
*மலை நாகம் செத்து இற்று மழையுரம் வருகுதே நச்சுத் தண்ணீர்*
*ஆனை படை சேனையெல்லாம் அத்தை மக்கள் மூவருந்தான்*
*நச்சு நீர் வாரியுண்டு நல்லுயிறும் மாண்டு விட்டார்"*
*( அண்ணன்மார் சுவாமி கதை, சக்திக்கனல் (பதிப்பாசிரியர்), ப. 395 )*

*தண்ணீரைப் பருகாததால் வீரமலை சாம்புகன் மட்டும் உயிர் தப்புகிறான்.*

*வளநாடு வந்து வீரமலை காட்டில் நடந்ததை சங்கரிடம் சொல்ல, ஆவேசம் கொண்டு போர்க்கோலம் பூண்டு, சங்கர் வீரமலை காட்டிற்கு புறப்பட்டு வருகிறார். வரும் வழியில் மாயவர், தலையூர் காளி மன்னனைப் போல் வடிவெடுத்து,*

*"வாழைத்தண்டை வில்லாக மல்லிகை பூ கணையாக*
*சிலை வளைத்து வில்லாக அதை சிருஷ்டித்தார் மாயவனார்"*
*( அண்ணன்மார் சுவாமி கதை, சக்திக்கனல் (பதிப்பாசிரியர்), ப. 400 )*

வீரமலை காட்டிற்கு குதிரையில் வரும் சங்கர் மீது, மாயவர் மறைந்திருந்து அம்பு எய்கிறார். தன் நெற்றிக்கு நேராக வந்த அம்பை சங்கர் தனது வலது கையால் பிடிக்கிறார். அந்த அம்பில்,

"வயது நூறு என்று சொல்லி உங்களை வாக்கு வரம் வாங்காமல்
பதினாறு போதுமென்று உங்களையர் பாலன் வரம் வாங்கி வந்தார்
பதினாறு முடிந்ததனி நீங்கள் பரமன் கதி சேர வேணும்
எழுத்து முடிந்ததினி நீங்கள் இங்கிருக்கக் கூடாது"
( அண்ணன்மார் சுவாமி கதை, சக்திக்கனல் (பதிப்பாசிரியர்), ப. 402 )

என்று எழுதியிருந்தது.

இது மாயவர் விட்ட அம்பு என்பதை உணர்ந்த சங்கர். இது என் நெற்றியில் பட்டு வன்னி மரம், வைர மரம், வேங்கை மரத்தை ஊடுருவி திருப்பாற்கடலில் மூழ்கி வரட்டும் என்று அம்பை விடுகிறார் அப்படியே அம்பு திரும்ப வருகிறது. உடனே சங்கர், ஒரு பாறை மீது பட்டை விரித்து,

"அதன் மேல் வலது காலை ஊற்றி வைத்து இடது கால் மண்டியிட்டு
மண்டியிட்டு காலூன்றி மார்பில் வைத்து கேடயத்தை
வடக்குமுகம் திரும்பி வைகுந்தம் பார்வையுந்தான்
கைலாசம் பார்த்து கண்ணு குமாரசங்கு கண்ணுறக்கமாகிவிட்டார்"
( அண்ணன்மார் சுவாமி கதை, சக்திக்கனல் (பதிப்பாசிரியர்), ப. 402 )

என்று சங்கர் படுகளமான விதம் கதைப்பாடலில் விவரிக்கப்படுகிறது.

"அரிய ரணகளத்தில் தம்பி, வீரபாகு சாம்புவன், அத்தை பிள்ளை மைத்துனரை விட்டு சென்று செங்கோல் அரசு நான் ஆள்வதில்லை என்று தம்பி சங்கர் மாண்ட இடத்திற்கு கிழபுறம் வந்து, பட்டை விரித்து வைத்து ஒரு காலை மண்டியிட்டு, ஒரு காலை சண்டியிட்டு தாய் தந்தையரை மனதில் எண்ணி; தன் பிறப்பை நெஞ்சில் எண்ணி, வளநாட்டு திசையை வாள்வீரன் ஒரு முறை பார்த்துவிட்டு தன் குத்துவாளை பொறை உருவி, மார்பில் குத்தி மடிந்தாரே! பொறுமை பொறுத்த பொன்னாண்டர் சாமியுமே!" என்று (பொன்னர் - சங்கர் - தங்காள் வாழ்க்கை வரலாறு, ஏ. பொன்னுசாமி ப. 210 ) பொன்னர் படுகளமான விதம் விவரிக்கப்படுகிறது.

படுகளமான பொன்னர் சங்கரைத் தேடி தங்கை அருக்காணி தங்கம் வீரமலை காட்டிற்கு வருகிறாள். அங்கே, "பெரிய காண்டியம்மன் துணையோடு, பரமனிடம் போராடி அண்ணமார்களை (பொன்னர் சங்கர்) மூன்றே முக்கால் நாழிகை எழுப்ப வரம் வாங்கி, பட்ட படுகளத்தில் அண்ணன்மார்களை உயிருடன் எழுப்பி வாய்மொழி கேட்டாள்" என்று (பொன்னர் - சங்கர் - தங்காள் வாழ்க்கை வரலாறு, ஏ. பொன்னுசாமி, பக். 243-244) இறந்த பொன்னர் சங்கர் மீண்டும் உயிர்த்தெழுந்த விதம் கூறப்படுகிறது. மீண்டும் உயிர்பெற்று எழுந்த பொன்னர் சங்கர் தங்கை அருக்காணி தங்கத்திடம், "மாண்டவர்கள் மீண்டால் மண்ணுலகம் தாங்காது, செத்தவர் மீண்டால் சீமை இடம் கொள்ளாது என்று தங்களிடம் கூறி, நாங்கள் சொர்க்கபுரி சென்று சிவன் பாதம் அடைகிறோம்" என்று (பொன்னர் - சங்கர் - தங்காள் வாழ்க்கை வரலாறு, ஏ. பொன்னுசாமி ப. 244 ) மீண்டும் மாண்டு போனதாகக் கூறப்படுகிறது.

மாசித் திருவிழாவில் படுகளக் கோயிலில் பொன்னர் சங்கர் படுகளம் சாய்தலும், தெய்வம் ஏறிய பெண் குழந்தை அப்படுகளங்களை எழுப்புவதும் கதைப்பாடலில் இடம் பெற்றுள்ள மேற்காணும் நிகழ்வை அடியொற்றியது என்பதை அறிய முடிகிறது.

படுகளம் சடங்கியல் அல்ல உளவியல்

பெருந்தெய்வக் கோயில்களில் மட்டுமல்லாது பல சிறு தெய்வக் கோயில்களிலும் விழாக் காலங்களில் சடங்கியல் நோக்கில் சில நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன. பூசாரிபட்டி படுகளக் கோயிலைப் பொறுத்த மட்டில் மாசி திருவிழாவில் படுகள நிகழ்வு என்பது சடங்கியல் சார்ந்தது என்று குறிப்பிட இயலவில்லை. ஏனென்றால், இங்கு ஒவ்வொரு ஆண்டு படுகள நிகழ்வின்போதும் நூற்றுக்கணக்கானோர் படுகளமாகின்றனர். கடந்த மாசி மாதம் (26.02.2023) நடைபெற்ற நிகழ்வின் போது 96 பேர் படுகளமாயினர். இவர்கள் வெவ்வேறு ஊர்களைச் சார்ந்தவர்கள். அதில் சிலர் முதல் முறையாக அன்று தான் அந்த இடத்துக்கு வந்தவர்கள். 'கோயில் வளாகத்திற்கு அமர்ந்திருந்த என்னை, ஏதோ ஒரு ஆற்றல் தள்ளி விட்டது போல இருந்தது நான் எப்படி படுகளம் விழுந்தேன் என்று தெரியவில்லை' என்று பொள்ளாச்சி சேர்ந்த க. லோகேஷ் என்ற இளைஞர் தெரிவித்தார். படுகளமான பலரின் அனுபவமும் இப்படித்தான் இருக்கிறது. படுகளமானவர்களுள் ஒரு சிலர் பலமுறை கோயிலுக்கு வந்தவர்கள். பொன்னர் சங்கர் கதையை

நன்கு தெரிந்தவர்கள். அதேசமயம், முதன்முறையாக அக்கோயிலுக்கு வந்து படுகளம் விழுந்தவர்களும் ஏதாவது ஒரு வகையில் பொன்னர் சங்கர் கதையை அறிந்துள்ளனர் என்பதையும் அவர்களுடன் கலந்துரையாடியதன் மூலம் அறிந்து கொள்ள முடிந்தது. முதல் முறையாக வந்த போது படுகளம் வீழ்ந்த வர்கள் ஆனாலும், பலமுறை வந்து படுகளம் விழுந்தவர்கள் ஆனாலும் பொன்னர் சங்கர் கதையை அறிந்துள்ளனர் என்பது கள ஆய்வில் தெரிய வருகிறது.

அதனால் 'தன்னை அதுவாக பாவித்தல்' என்ற உளவியல் அடிப்படையில் பொன்னர் சங்கர் மீது கொண்ட பக்தி அல்லது அவர்களது வாழ்க்கையைத் தனது வாழ்க்கையோடு இணைத்து பார்க்கும் உளவியலே படுகளம் நிகழ்வின் அடிப்படை என்பதை அறிய முடிகிறது. அதனால் ஏற்படும் மன எழுச்சி அல்லது சோர்வு காரணமாக படுகளமாக வீழ்கின்றனர்.

முடிவுரை

வளநாட்டை ஆண்ட சிற்றரசர்களாகக் கருதப்படுகின்ற பொன்னர் சங்கர் வரலாற்றை கட்டமைத்ததில் கதைப்பாடலுக்குப் பெரும் பங்கு உண்டு. அதோடு அவர்களின் வரலாற்றை இன்றளவும் மக்களிடையே பரப்பி வருபவர்கள் உடுக்கையடிக் கதைப்பாடல் கலைஞர்கள் தான். பொன்னர் சங்கர் வாழ்ந்த இடங்களில் அமைக்கப்பட்டுள்ள கோயில்கள் மட்டுமல்லாது, தமிழகத்தின் பல மாவட்டங்களில் நூற்றுக்கணக்கான கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன ஆனாலும், அவர்களின் வாழ்விடக் கோயிலுக்கு ஆண்டுக்கு ஒரு முறையாவது வரவேண்டும் என்பதில் பக்தர்கள் ஆர்வமாக உள்ளதை அறிய முடிகிறது. அதனால் தான் மாசித் திருவிழாவின் போது பல்லாயிரக்கணக்கான மக்கள் மூன்று நாள் பயணமாக இக்கோயில்களுக்கு வருகின்றனர். பொன்னர் சங்கர் வாழ்விடக் கோயில்களில் படுகளம் தனித்தன்மை மிக்கதாக உள்ளது. இங்கு வரும் பக்தர்கள் பயம் கலந்த பக்தியுடன் வழிபாடு செய்வதைக் காண முடிகிறது. பொன்னர் சங்கர் படுகளமான இடத்தில் அமைந்துள்ள கோயில் என்பதால் இங்கு வழங்கப்படும் திருநீறு உள்ளிட்ட பிரசாதங்களை வீட்டிற்குக் கொண்டு செல்ல பலர் தயங்குவதையும் அறிய முடிகிறது.. மாசித் திருவிழாவில் படுகள நிகழ்வின்போது, படுகளம் சாய்தல் மற்றும் எழுப்புதலை 'போலச் செய்தல்' என்ற நிலையில் பார்க்காமல், உளவியல் சார்ந்த நிகழ்வாகவே பார்க்க முடிகிறது. படுகளக் கோயிலின் வழிபாட்டு முறைகள், மாசித் திருவிழா நடைபெறும் விதம், பொன்னர் சங்கர் படுகள நிகழ்வு ஆகியவற்றை இவ்ஆய்வின் மூலம் அறிய முடிகிறது.

தகவலாளர் பட்டியல்:

1. மு. வீரசங்கர், பூசாரிப்பட்டி, நேர்காணல், நாள்: 25.2.2023
2. பொ.முனியப்பன், பூசாரிப்பட்டி, நேர்காணல், நாள்: 07.05.2023
3. சி.சண்முகம், தொப்பம்பட்டி , நேர்காணல் நாள்: 26.2. 2023
4. மு. பொன்னுசாமி, பூசாரிப்பட்டி, நேர்காணல் நாள்: 26.2. 2023
5. ம. பாண்டியன், வீரப்பூர், நேர்காணல், நாள்: 26.2.2023
6. க. லோகேஷ், பொள்ளாச்சி, நேர்காணல், நாள்: 26.2.2023

துணைநூற்பட்டியல்:


1. சக்திக்கனல்(பதிப்பாசிரியர்), அண்ணன்மார் சுவாமி கதை, நர்மதா பதிப்பகம், தியாகராய நகர், சென்னை -17, முதற்பதிப்பு – 1985.
2. திருக்கோயில் வெளியீடு, பொன்னர் சங்கர் அண்ணன்மார் வரலாறு, வீரப்பூர் திருக்கோயில், பதிப்பு ஆண்டு குறிப்பிடப்படவில்லை.
3. பழனிசாமி-சாந்திபழனிசாமி, அருள்மிகு பொன்னர்-சங்கர் அண்ணன்மார் வரலாறு, டாக்டர் வி.என்.எல் அறக்கட்டளை மதுரை ரோடு, மணப்பாறை, முதற்பதிப்பு –2016.
4. பொன்னுசாமி ஏ., பொன்னர் - சங்கர் - தங்காள் வாழ்க்கை வரலாறு, மாவீரன் தீரன் சின்னமலை பேரவை, திருப்பூர், முதற்பதிப்பு – 2013.


********* ********* ********** ********* ********* ********** ********** **********